தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-2272060 9443699066


admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

கனி பிரிண்டிங்
DTP
நாளிதழ் வார இதழ் மாத இதழ்
சிறந்த முறையில் (DTP) செய்து தரப்படும்
நாளிதழ் மந்திலி மேகஸிங் குறைந்த விலையில் பிரிண்டிங் செய்து தரப்படும்
தொடர்புக்கு : 94436 99066

மலர்:03 | இதழ்:302 | 4 பக்கங்கள் | 29:05:2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தாரூ,1825



செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற.

**விளக்கம்:**

வலியோரிடம் சினம் கொண்டால், அதனால்கேடு விளையும். மெலியோரிடம் சினம் கொண்டாலும் அதைவிடக் கேடு வேறொன்றுமில்லை.

## “நீட் முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் தப்ப முடியாது” - மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் உறுதி



புதுடெல்லி: மே,29

நீட் மறுதேர்வை எவ்வித முறைகேடுகளும் இன்றி, நியாயமாக நடத்துவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு எடுத்து வருவதாக மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார். வினாத்தாள் கசிவு முறைகேடுகளுக்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். தனியார் ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் பேசிய அமைச்சர் தர்மேந்திர பிரதான், நீட் மற்றும் சிபிஎஸ்இ தேர்வுகள் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் மிகவும் துரதிர்ஷ்டவசமானவை என்று தெரிவித்துள்ளார். இதுபோன்ற சம்பவங்கள் ஒருபோதும் நடந்திருக்கக் கூடாது என்று குறிப்பிட்ட அவர், இந்தத் தவறுகளுக்குத் தார்மீகப் பொறுப்பேற்பதாகவும், இனிவரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் மீண்டும் நிகழாமல் இருக்க அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருவதாகவும் கூறினார்.கடந்த காலக் குளறுபடிகளைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட கே.ராதாகிருஷ்ணன் குழுவின் 102 பரிந்துரைகளில், 70-க்கும் மேற்பட்ட குறுகிய காலப் பரிந்துரைகளை அரசு ஏற்கனவே அமல்படுத்தியிருந்த போதிலும் இந்தத் தவறுகள் நடந்துள்ளதாக அவர் தெரிவித்தார். இதற்காக மாணவர்களிடம் மன்னிப்புக் கேட்பதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.நீட் மறுதேர்வு வரும் ஜூன் 21 அன்று நடைபெறுகிறது. இதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து ஒட்டுமொத்த அரசாங்க அமைப்பாக வினாத்தாள் தயாரிப்பு முதல் தேர்வு முடிந்து விடைத்தாள்களைப் பாதுகாப்பாகத் திருப்புவது வரையிலான ஒவ்வொரு கட்டத்தையும் கண்காணிக்கவுள்ளன. நாடு முழுவதும் சுமார் 5,400 தேர்வு மையங்கள் மற்றும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் வகுப்பறைகளில் இத்தேர்வு நடைபெறவுள்ளது. முறைகேடுகளைத் தவிர்க்க, இந்த மையங்கள் பெரும்பாலும் அரசு நிறுவனங்களிலேயே அமையுமாறு கடுமையான பாதுகாப்பு நெறிமுறைகளுடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மாவட்ட அளவிலும் இதற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொடர் குளறுபடிகளால் மாணவர்கள் சந்தித்துள்ள மன அழுத்தத்தைக் குறைப்பதே அரசின் முக்கிய நோக்கம் என்று கூறிய அமைச்சர், ரத்து செய்யப்பட்ட தேர்வுக்காக மாணவர்கள் செலுத்திய கட்டணம் முழுமையாகத் திருப்பித் தரப்படும் என்றும், மறுதேர்வுக்கு எந்தவிதக் கட்டணமும் வசூலிக்கப்படாது என்றும் அறிவித்துள்ளார். மேலும், மாணவர்கள் தங்களின் தேர்வு மையங்களை மாற்றிக்கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டதில், 2.5 லட்சம் முதல் 3 லட்சம் மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான மையங்களை மாற்றியுள்ளனர்.இந்த ஒட்டுமொத்த மறுதேர்வு தயாரிப்புப் பணிகளையும் பிரதமரின் அலுவலகம் நேரடியாகக் கண்காணித்து வருவதாகவும், மாநில அரசுகளின் கூட்டு முயற்சியோடு தேர்வு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்படும் என்றும் தர்மேந்திர பிரதான் உறுதியளித்துள்ளார்.

## “விரைவில் சித்தராமையா ராஜினாமா; டிகே சிவகுமார் முதல்வர் ஆகிறார்” - உறுதிப்படுத்திய கர்நாடக அமைச்சர் பாட்டீல்






பெங்களூரு: மே,29

“முதல்வர் சித்தராமையா இன்று மாலை 3 மணி அளவில் பதவியை ராஜினாமா செய்ய உள்ளார். டி.கே. சிவகுமார் புதிய முதல்வராவார்” என மாநில அமைச்சர் ஹெச்.கே. பாட்டீல் தெரிவித்துள்ளார்.கர்நாடக முதல்வர் மாற்றம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் டெல்லியில் நேற்று முன்தினம் (மே 26) நடைபெற்றது. டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகமான இந்திரா பவனில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, கர்நாடக முதல்வர் சித்தராமையா, கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமார், காங்கிரஸ் அமைப்பு பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால், கர்நாடக காங்கிரஸ் பொறுப்பாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான ரந்தீப் சுர்ஜேவாலா, காங்கிரஸ் மூத்த தலைவர் சச்சின் பைலட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில், முதல்வர் பதவியில் இருந்து சித்தராமையா விலக வேண்டும் என்றும் அடுத்த முதல்வராக டி.கே. சிவக்குமார் பதவியேற்க அவர் விழிவிட வேண்டும் என்றும் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியதாக தகவல் வெளியானது. மேலும், முதல்வர் பதவியை சித்தராமையா ராஜினாமா செய்த பிறகு, அவர் மாநிலங்களவை உறுப்பினராக தேர்வு செய்யப்படுவார் என்றும், கர்நாடக சட்ட மேலவை உறுப்பினராக உள்ள அவரது மகன் யதீந்திரா அமைச்சரவையில் சேர்க்கப்படுவார் என்றும் சமரச திட்டம் முன்வைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. இதையடுத்து, முதல்வர் பதவியில் இருந்து விலக சித்தராமையா ஒப்புக்கொண்டதாக தகவல் வெளியானது. எனினும், கட்சியினர் யாரும் இதனை உறுதிப்படுத்தவில்லை.இந்நிலையில், பெங்களூருவில் உள்ள தனது அதிகாரப்பூர்வ இல்லாமான காவரியில் இன்று காலை உணவு சந்திப்புக்கு முதல்வர் சித்தராமையா அழைப்பு விடுத்திருந்தார். அவரது அழைப்பை ஏற்று, துணை முதல்வர் டி.கே. சிவக்குமார், அமைச்சர்கள் பிரியங்க் கார்கே, கே.ஜே. ஜார்ஜ், எம்.பி. பாட்டீல், ராமலிங்க ரெட்டி, ஹெச்.கே. பாட்டீல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில், கட்சி மேலிடத்தின் விருப்பத்துக்கு இணங்க முதல்வர் பதவியில் இருந்து தான் விலக உள்ளதாகவும், அடுத்த முதல்வராக டி.கே. சிவகுமார் பதவியேற்பார் என்றும் சித்தராமையா அறிவித்தார்.

# சோனியா, ராகுல் சந்திப்பு ரத்து: டெல்லி பயணத்தை முன்கூட்டியே முடித்துக் கொண்டு சென்னை திரும்பினார் முதல்வர் விஜய்

சென்னை: மே,29

டெல்லி பயணத்தை முன்கூட்டியே முடித்துக் கொண்டு முதல்வர் விஜய் நேற்று சென்னை திரும்பினார். முன்னதாக திட்டமிடப்பட்ட சோனியா, ராகுல் சந்திப்பு ரத்து செய்யப்பட்டதால் அரசியலில் அது பெரும்விவாதப் பொருளாக மாறியுள்ளது.நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக 108 இடங்களில் வெற்றி பெற்றது. ஆட்சி அமைக்க பெரும்பான்மை கிடைக்காததால் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, ஐயுஎம்எல் கட்சிகளின் ஆதரவுடன் விஜய் முதல்வராக பதவியேற்றார். இப்படியான அரசியல் திருப்பங்களுக்கிடையே முதல்வர் விஜய் நேற்று முன்தினம் டெல்லி சென்றார். இது அவரது முதல் டெல்லி பயணம் என்பதால், தேசிய அளவில் இது உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டது. சென்னையில் இருந்து தனி விமானத்தில் 27-ம் தேதி மதியம் டெல்லி சென்றடைந்த விஜய்க்கு, தமிழக அரசு விருந்தினர் இல்லத்தில் தமிழக காவல்துறை சார்பில் முறைப்படியான அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அன்றைய தினம் மாலை 4.30 மணியளவில் நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் நரேந்திர மோடியை விஜய் சந்தித்துப் பேசினார்.பிரதமரைத் தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை விஜய் சந்திப்பதாக இருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் அந்த சந்திப்பு நடைபெறவில்லை. அதையடுத்து விஜய் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து தமிழகத்துக்கான திட்டங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்நிலையில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு மற்றும் காங்கிரஸ் மூத்த தலைவர்களான சோனியா, ராகுல், மல்லிகார்ஜுன கார்கே ஆகியோரையும் விஜய் சந்திப்பார் என்ற தகவல் வெளியானது.இதனால் சோனியாவின் இல்லத்தைச் சுற்றிலும் முதல்வர் விஜய்யை வரவேற்று பிரம்மாண்ட பதாகைகளும் வைக்கப்பட்டிருந்தன.



ஆனால் திடீரென காங்கிரஸ் தலைவர்களுடனான சந்திப்பு ரத்தானது. முன்னதாக கேரளாவின் புதிய காங்கிரஸ் முதல்வராக சதீஷன் பதவியேற்கும் விழாவில் விஜய் பங்கேற்பதாக இருந்த திட்டம் திடீரென ரத்தான நிலையில், டெல்லியில் காங்கிரஸ் தலைவர்களை விஜய் சந்திக்க இருந்த திட்டமும் ரத்தானது இது கட்சி நிர்வாகிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இப்படியான சூழலில் நேற்று காலை 10 மணியளவில் டெல்லி பயணத்தை முன்கூட்டியே முடித்துக்கொண்டு தனி விமானத்தில் விஜய் சென்னை திரும்பினார். முன்னதாக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். வழக்கமாக கருணாநிதி, ஜெயலலிதா, ஸ்டாலின், பழனிசாமி உள்ளிட்ட முன்னாள் முதல்வர்கள் டெல்லி சென்று பிரதமரை சந்தித்தால் தமிழ்நாடு அரசு விருந்தினர் இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்திப்பது வழக்கம். ஆனால் விஜய் செய்தியாளர்கள் சந்திப்பையும் தவிர்த்தது பேசுபொருளானது. இதுகுறித்து சென்னை தலைமைச் செயலக வட்டாரங்கள் கூறியதாவது: பிரதமர் மோடியுடனான விஜய்யின் சந்திப்பு சுமார் 10 நிமிடங்கள் நீடித்தது. இந்த சந்திப்பின்போது நெதர்லாந்தில் இருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க சோழர் காலத்தைச் சேர்ந்த ஆனைமங்கலம் செப்புப் பட்டயங்களை மீட்டுக் கொண்டு வர வழிவகை செய்ததற்காகப் பிரதமருக்கு விஜய் நன்றி தெரிவித்தார்.மேலும் காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடக அரசு திட்டமிட்டுள்ள மேகேதாட்டு அணைத் திட்டத்தால் தமிழக விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் விவரித்தார். இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்படுவதற்கு நிரந்தரத் தீர்வு காண வலியுறுத்தினார். அரசு விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவது தொடர்பாக அண்மையில் எழுந்த சர்ச்சை குறித்து பேசினார். தமிழகத்தில் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு மையம் மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த வான்வழி உள்கட்டமைப்புகளை நிறுவக் கோரியும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார். அமித் ஷாவுக்கு அவசர அலுவல் பணிகள் இருந்ததால் விஜய்யை சந்திக்கவில்லை. ஆனால் காங்கிரஸ் மூத்த தலைவர்களை சந்திக்காமல் சென்னைக்கு திரும்பியதில் பல்வேறு அரசியல் காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. காவிரி விவகாரம் மற்றும் தமிழகத்தில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பின்போது எழுந்த குதிரை பேர சர்ச்சைகள், கர்நாடக காங்கிரஸில் வெடித்துள்ள உள்கட்சி பிரச்சினை போன்றவற்றால் இப்போது காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்தால் அது தேவையற்ற விவாதங்களை உருவாக்கும் என்பதால் விஜய் இந்தச் சந்திப்பைத் தவிர்த்ததாக ஒருதரப்பில் தகவல்கள் கூறப்படுகின்றன. ஆனால் மற்றொரு தரப்போ காங்கிரஸ் தலைவர்களுடனான சந்திப்பு நடைபெறாததற்கு பின்னணியில் சில அரசியல் அழுத்தங்களும் இருக்கலாம் என்கிறார்கள். இவ்வாறு தெரிவித்தனர். காரணம் என்ன? - இந்தச் சர்ச்சை குறித்து காங்கிரஸ் எம்.பி. கிறிஸ்டோபர் திலக் கூறியதாவது: இதனை தமிழக முதல்வர் ஒரு அரசுமுறைப் பயணமாக மட்டுமே வைத்திருக்க விரும்பியிருக்கலாம். அதனால்தான் பிரதமரை மட்டும் சந்தித்துவிட்டுத் திரும்பியுள்ளார். ஜூன் 11-ம் தேதி முதல்வர் மீண்டும் டெல்லி வரவுள்ளார். அப்போது நிச்சயமாக சோனியா, ராகுலைச் சந்திப்பார்.தற்போது ஜார்கண்ட் மாநிலங்களவை சீட், கர்நாடகாவில் முதல்வர் தேர்வு உள்ளிட்ட விஷயங்கள் குறித்து விவாதிப்பதற்காக அந்த மாநில காங்கிரஸ் தலைவர்கள் டெல்லி வந்துள்ளனர். கடந்த இரண்டு நாட்களாக இந்த விவாதங்கள் சோனியா இல்லத்தில் தீவிரமாக நடந்து வருவதால், தமிழக முதல்வருடன் விரிவாக அமர்ந்து பேசுவதற்கான நேரமும் வாய்ப்பும் காங்கிரஸ் தலைவர்களுக்குக் குறைவாக இருந்தது. இதில் யோசிப்பதற்கோ அல்லது எதிர்மறையாக நினைப்பதற்கோ எதுவும் இல்லை. நாங்கள் தவெக கூட்டணியில் நீடிக்கிறோம், அமைச்சரவையிலும் இருக்கிறோம். எனவே, நாங்கள் சந்திப்பதில் எந்தச் சிக்கலும் இல்லை. விஜய் முதல்வராக பதவியேற்றபோது ராகுல்தான் முதல் ஆளாக வந்து பங்கேற்றார். சோனியா காந்தி இல்லத்தில் முதல்வருக்கு விருந்து கொடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கலாம். ஆனால், காங்கிரஸ் தலைமை சில முக்கிய உள்கட்சி முடிவுகளை எடுக்க வேண்டியிருந்ததால், அது அடுத்த முறைக்குதள்ளிவைக்கப்பட்டிருக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## இந்திய பொறியியல் திறனை உலக அரங்கில் உயர்த்தும் டொயோட்டாவின் புதிய ஹப்..



சென்னை: மே,29

டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார், கர்நாடக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக அறிவித்துள்ளது. இதன் மூலம் பெங்களூருவிலுள்ள க்வின் சிட்டியில் “டிகேஎம் பிஸ்இன்டெல் ஹப்” அமைக்கப்பட உள்ளது. இந்த மையம் இந்தியாவில் டொயோட்டாவின் பொறியியல் திறன், டிஜிட்டல் மாற்றம் மற்றும் புத்திசாலித் தொழில்துறை வளர்ச்சியை வலுப்படுத்தும் முக்கிய முயற்சியாக பார்க்கப்படுகிறது.300 ஏக்கர் பரப்பளவில் உருவாகும் இந்த மையம், இயக்கத் தீர்வுகள் பரிசோதனை, டிஜிட்டல் மாற்றம், நுண்ணறிவு உற்பத்தி மற்றும் முழு சப்ளை செயின் மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டுள்ளது.கர்நாடக முதல்வர் சித்தராமையா கூறுகையில், “இந்த கூட்டாண்மை தொழில்நுட்ப முதலீடு, தரமான வேலைவாய்ப்பு மற்றும் நிலையான தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிக்கும்” என்றார்.மசகாஸு யோஷிமுரா தெரிவித்ததாவது, “இந்தியா டொயோட்டாவிற்கு முக்கியமான சந்தையாகும். திறமையான இந்திய பொறியாளர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப திறன்களை பயன்படுத்தி, உலகளாவிய அளவில் புதுமை மற்றும் நிலையான இயக்கத் தீர்வுகளை மேம்படுத்த இந்த மையம் உதவும்” என்றார்.



திருவாரூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் 4.6.2026ஆம் தேதி முதல் திருவாரூர் மாவட்டத்தில் பள்ளிகள் திறக்கப்படவுள்ளதால், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின்கீழ் 898 பள்ளிகளிலும் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

## டாஸ்மாக் ஊழியர்கள் போராட்டம் தீவிரம்: “பெரு முதலாளிகளை சந்திக்க நேரம் உள்ளது; தொழிற்சங்கங்களை சந்திக்க நேரமில்லையா?” - கு. பாரதி கேள்வி

தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் நலச்சங்கம்
TNTSWA

தமிழகம் முழுவதும் டாஸ்மாக் கடைகள் அடைப்பு போராட்டம் மூன்றாவது நாளாக தீவிரமாக நடைபெற்று வருகிறது. பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், மாதிரி நிலை ஆணையம் வழங்குதல் மற்றும் காலி மதுபாட்டில்களை திரும்பப் பெறும் பணிக்கு ஒப்பந்த ஊழியர்களை பயன்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.இதுகுறித்து தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் நல சங்கத்தின் சிறப்பு தலைவர் கு. பாரதி செய்தியாளர்களிடம் கூறியதாவது:“ஈரோடு, திருப்பூர், நாமக்கல் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் டாஸ்மாக் கடைகளை அடைத்து ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஊழியர்களின் கருத்தைக் கேட்காமல் காலி மதுபாட்டில் திரும்பப் பெறும் திட்டத்தை அவர்கள்மீது திணிக்கின்றனர். ஏற்கனவே ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் தற்காலிக பணி நீக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது கடை அடைப்பு போராட்டத்தால் மேலும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். தமிழகம் முழுவதும் உள்ள 4,765 டாஸ்மாக் கடைகளையும் மூடி, 23 ஆண்டுகளாக பணிபுரியும் ஊழியர்களுக்கு மாற்று வேலை வழங்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறோம். தமிழக முதலமைச்சர் தொழிற்சங்க நிர்வாகிகளை அழைத்து பேசி தீர்வு காண வேண்டும். ஆனால் பெரு முதலாளிகள், தமிழ் சினிமா பிரபலங்கள், சின்னத்திரை நடிகர்கள், திரைப்பட தயாரிப்பு சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோரை சந்திக்க நேரம் உள்ள நிலையில், தொழிற்சங்க நிர்வாகிகளை சந்திக்க நேரமில்லையா?” என கேள்வி எழுப்பினார்.மேலும் அவர் கூறுகையில், “உழைக்கும் மக்களால் தான் அரசு கஜானாவில் பணம் சேர்கிறது. வருடத்திற்கு ரூ.48 ஆயிரம் கோடி வருமானம் தரும் 23 ஆயிரம் டாஸ்மாக் ஊழியர்களுக்கு ரூ.500 கோடி கூட ஊதியமாக வழங்கப்படவில்லை. 11,500 ரூபாய் ஊதியத்தில் குடும்பம் நடத்துவது எப்படி?ஐந்து ஆண்டுகள் பணிபுரிந்தால் பணி நிரந்தரம் செய்யப்படும் என முதலமைச்சர் கூறியுள்ளார். அதே கோரிக்கையையே நாங்களும் முன்வைக்கிறோம். அரசு நினைத்தால் இரண்டே நாட்களில் பணி நிரந்தரம் மற்றும் காலி பாட்டில் திரும்பப் பெறும் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.ஜூன் மாத இறுதிக்குள் காலி பாட்டில் திரும்பப் பெறும் திட்டத்தை செயல்படுத்துவோம் என அமைச்சர் கூறியிருப்பது மீண்டும் தொழிலாளர்களை ஏமாற்றும் வாக்குறுதியாகவே மாறும். அரசு பதவியேற்று இரண்டே நாட்களில் 717 டாஸ்மாக் கடைகளை மூட அரசாணை பிறப்பிக்க முடிகிறது. எனவே டாஸ்மாக் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.மேலும், “தமிழ்நாடு அரசு டாஸ்மாக் கடைகளை மூடவில்லை என்றால் பெண்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து டாஸ்மாக் கடைகளை மூட தயாராக உள்ளனர். இதன் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழல் உருவாகும்” என்றும் தெரிவித்தார்.பேட்டி: கு. பாரதி
(சிறப்பு தலைவர், தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் நல சங்கம்)

# தமிழக முதல்வரே பல்கலைக்கழகங்களின் வேந்தராகும் முறை கட்டாயமில்லை:

## அமைச்சர் விஸ்வநாதன் தகவல்

தமிழக முதல்வரே பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்ற திமுக அரசின் நடைமுறையை பின்பற்றும் கட்டாயம் எங்களுக்கு ஏதும் கிடையாது என்று உயர்கல்வி அமைச்சர் பெ. விஸ்வநாதன் மதுரையில் நேற்று தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் நேருவின் நினைவு தினத்தை முன்னிட்டு, மதுரை தல்லாகுளத்தில் நேற்று காங்கிரஸ் சார்பில் அவரது சிலைக்கு பெ.விஸ்வநாதன் மரியாதை செலுத்தினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மேகேதாட்டு அணை விஷயத்தில் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு மிகத் தெளிவானது. ஒரு செங்கல்லை கூட கர்நாடக அரசு எடுத்து வைக்கக் கூடாது. அதற்கு அனுமதிக்க மாட்டோம். இந்த ஆட்சி 5 ஆண்டுகள் நிலைத்து நிற்கும். முதல்வரின் கரத்தை வலுப்படுத்த இந்த ஆட்சியை 5 ஆண்டுகள் கொண்டு செல்வதற்கு காங்கிரஸ் இரும்புக் கோட்டையாக அவர் பின்னால் நிற்கும். உயர் கல்வித்துறை சார்பில் கல்லூரி சேர்க்கை கவுன்சிலிங் தொடர்பாக ஜூன் 3ம் தேதிக்குள் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி அறிவிப்பேன். மருத்துவம், பொறியியல் தேர்வில் தமிழ் இடம் பெறாதது 'டெக்னிக்கல்' காரணம்.

தமிழக முதல்வரே பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்ற திமுக அரசின் நடைமுறையை பின்பற்றும் கட்டாயம் எங்களுக்கு கிடையாது. இதில் தமிழக முதல்வரின் கொள்கை முடிவின் படி செயல்படுவோம்.

ஒரு கட்சி எம்எல்ஏ அவரது விருப்பத்துக்கு ஏற்றவாறு பதவியை ராஜினாமா செய்து விட்டு, விரும்பும் கட்சியில் இணைந்து மீண்டும் மக்களை சந்தித்து எம்எல்ஏவாக விரும்புகிறார். இது ஜனநாயகத்தில் விரோதமாகவோ, குதிரை பேரமாகவோ கருதவில்லை. அமைச்சர் மறுப்பு: இதனிடையே துணை வேந்தர் கருத்துக்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்த நிலயில், விளக்கமளித்து விஸ்வநாதன் கூறுகையில், "பல்கலைக் கழகங்களில் வேந்தர்களாக முதலமைச்சர் பொறுப்பேற்பது குறித்து முதல்வர் விஜய் உரிய நேரத்தில் கொள்கை முடிவு எடுப்பார் என்று தான் கூறினேன்.

சில ஊடகங்கள் திரித்து செய்தி வெளியிட்டதை வன்மையாக கண்டிக்கிறேன். மறுக்கிறேன். மாநில உரிமைகளை பறிக்கிற வகையில் எனது கருத்து அமைந்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பானது. இத்தகைய வாதங்களை முன்வைப்பது அரசியல் உள்நோக்கம் கொண்ட செயலாகும்" எனத் தெரிவித்துள்ளார்.



புதுச்சேரி, வில்லியனூர் திருக்காமேஸ்வரர் திருக்கோயில் தேர்த் விழாவை முன்னிட்டு, வில்லியனூர் சட்டமன்ற ரவிக்குமார், பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

# புதுச்சேரி ஸ்ரீ மணக்குள விநாயகருக்கு 1008 இளநீர் அபிஷேகம்

புதுச்சேரி, மே 29

புதுச்சேரி மணக்குள விநாயகர் திருக்கோயிலில் கோடை வெப்பத்தின் உக்கிரம் தணியவும், மக்கள் நலமுடன் வாழவும் வேண்டி மூலவர் மணக்குள விநாயகருக்கு 1008 இளநீர் கொண்டு மகா அபிஷேகம் மற்றும் சிறப்பு தீபாராதனை நடத்தப்பட்டது.

அக்னி நட்சத்திர காலத்தில் விநாயகருக்கு இளநீர் அபிஷேகம் செய்வது வெகு விசேஷமாக கருதப்படுகிறது.



இந்நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் . செய்தார். முன்னதாக, துணைநிலை ஆளுநரை சட்டமன்ற உறுப்பினர் விக்னேஷ் கண்ணன் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்றார்.

இதில் கோயில் நிர்வாகிகள், அறங்காவலர்கள் மற்றும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். வெயிலின் தாக்கத்தில் இருந்து மக்களை காக்க வேண்டி நடைபெற்ற இந்த அபிஷேகத்தில் பங்கேற்ற பக்தர்களுக்கு அபிஷேக இளநீர் பிரசாதமாக வழங்கப்பட்டது.



வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேலூர் அடுத்த கணியம்பாடியை சேர்ந்த ஊர் பொதுமக்கள் பாலம்பாக்கம், கணியம்பாடி, நெல்வாய், பங்களத்தான், மூஞ்சூர்பட்டு, பாலம்பாக்கம், ஈடிகை தோப்பு ஆகிய ஏரிகளில் வண்டல் மண் எடுப்பதனை தடுக்க வேண்டும் என்றும், மண் வளத்தையும்நீர்வளத்தையும்பாதுகாத்திடவேண்டும்என்றுஊர்மக்கள்கையில்பதாகைகள்ஏந்தியபடி மனு வழங்கினர். இதில் புதூர் பகுதியில் 80 ஏக்கரில் 30 அடி, ஆழத்திற்கு மேல் வண்டல் மண் எடுக்கப்பட்டுள்ளது. இதனை தடுக்க வேண்டும் என்றும் மண்வளத்தினை காத்திட வேண்டும் என தெரிவித்தனர்.மனுவை மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் சச்சிதானந்தம் பெற்றுக்கொண்டார்.



உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக முதல்வர் வழிகாட்டுதலின் பேரில் மதுரை மத்திய தொகுதி எம்எல்ஏ முஸ்தபா அலுவலகத்தில் சுமார் 300 நபர்களுக்கு சிக்கன் பிரியாணி வழங்கினார்கள். மத்திய தொகுதி மாவட்ட இணை செயலாளர் கோகுல்நாத் மற்றும் நிர்வாகிகள் கில்லி சிவா, கனிராஜ் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டு எம்எல்ஏ சார்பில் பொதுமக்களுக்கு சிக்கன் பிரியாணி வழங்கினர்.



அதிமுக முன்னாள் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் சதன் பிரபாகரன் மற்றும் நகர் மன்ற உறுப்பினர் வின்சென்ட் ஆகியோர் அமைச்சர் செங்கோட்டையன் முன்னிலையில் தவெகவில் இணைந்தனர். சட்டமன்ற தேர்தலுக்கு பிறகு அதிமுகவில் பிளவு ஏற்பட்டு தற்போது இரு அணிகள் ஒன்றிணைந்து வருகின்றன. இந்த சூழலில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மீதான அதிருப்தியால் முக்கிய நிர்வாகிகள் பலரும் தவெகவுக்கு படையெடுத்து வருகின்றனர்.



மதுரை, பொதுமக்களின் பன்முக திறமைகளை அங்கீகரிக்கும் பத்ம விருதுகளுக்கு கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூகப் பணி, அறிவியல், பொறியியல், பொது நிர்வாகம், சிவில் சேவை, வர்த்தகம் மற்றும் தொழில் துறைகளில் சாதனை புரிந்தவர்கள் www.awards.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 31.07.2026க்குள் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு மாவட்ட சமூக நல அலுவலர் அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது

# "4 எம்எல்ஏக்கள் ராஜினாமா குறித்து சிபிஐ விசாரணை வேண்டும்"; அதிமுக எம்.பி தனபால்

"பதவியேற்ற உடனே ராஜினாமா செய்த நான்கு அதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் பின்னணியை ஆராய வேண்டும். மிகப்பெரிய அளவில் பணப் பரிமாற்றம் நடைபெற்றிருப்பதாக தகவல் வருகிறது. இதுகுறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்" என அதிமுக எம்.பி தனபால் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தவெகவிற்கு தனி மெஜாரிட்டி இல்லாத சூழலில், அதிமுகவை உடைக்க நினைத்தும் முடியாத நிலையில், பதவியேற்ற உடனே ராஜினாமா செய்த நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் பின்னணியை ஆராய வேண்டும். மிகப்பெரிய அளவில் பணப் பரிமாற்றம் நடைபெற்றிருப்பதாக தகவல். ஜனநாயகத்தை காக்க மத்திய அரசு சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். அமலாக்கத் துறையும் இதில் கவனம் செலுத்த வேண்டும்." எனத் தெரிவித்துள்ளார்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக 47 இடங்களில் மட்டுமே வென்று மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் பழனிசாமியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு சி.வி.சண்முகம் தலைமையில் 25 எம்எல்ஏக்கள் தனி அணியாகச் செயல்பட்டனர். மேலும், தவெக அரசின் நம்பிக்கை கோரும் தீர்மானத்துக்கு ஆதரவாகவும் வாக்களித்தனர்.

அதைத் தொடர்ந்து, இரு அணியினரும் சட்டப்பேரவை அதிமுக தலைவர், கொறடாவைத் தேர்ந்தெடுத்து, பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகரிடம் கடிதம் அளித்திருந்தனர். அதேபோல், இரு அணியினரும் எதிரணியைச் சேர்ந்த எம்எல்ஏ.க்களை கட்சித் தாவல் தடை சட்டத்தின் கீழ் தகுதி நீக்கம் செய்யுமாறும் அவரிடம் கடிதம் அளித்தனர்.

இதற்கிடையே, சி.வி.சண்முகம் அணியில் இருந்த மரகதம் குமரவேல், சத்யபாமா, ஜெயக்குமார், இசக்கி சுப்பையா ஆகிய 4 எம்எல்ஏக்கள், தங்கள் பதவியை ராஜினாமா செய்து விட்டு, தவெகவில் இணைந்தனர். மேலும், ஆற்காடு எம்எல்ஏ சுகுமார் உள்ளிட்ட 6 எம்எல்ஏ.க்கள், பழனிசாமி அணிக்கு மாறினார். இதனால் சி.வி.சண்முகம் அணியின் பலம் 15 ஆகக் குறைந்தது.

இந்நிலையில், சி.வி.சண்முகம் அணி எம்எல்ஏக்களான எஸ்.பி. வேலுமணி , சி.விஜயபாஸ்கர்,

கே . பி.அன் பழகன் உள்ளிட்டோர் பழனிசாமியை சென்னை பசுமைவழிச் சாலையில் நேற்று சந்தித்து சமாதானப்பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் உடன்பாடு எட்டப்பட்ட நிலையில்,

இரு அணியினரும் தலைமைச் செயலகம் புறப்பட்டுச் சென்றனர். அங்கு இரு அணிகள் சார்பிலும், தகுதி நீக்க நடவடிக்கை கோரி பேரவைத் தலைவரிடம் ஏற்கெனவே அளித்த கடிதத்தை திரும்பப் பெறுவதாக கடிதம் அளித்தனர். மேலும், அதிமுகவின் சட்டப்பேரவை கட்சித் தலைவராக பழனிசாமி, கொறடாவாக அக்ரி கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை தேர்ந்தெடுத்திருப்பதாகவும் பேரவைத் தலைவரிடம் கடிதம் அளித்தனர்.

ஒருவழியாக அதிமுக உள்ளரசியல் முடிவுக்கு வந்த நிலையில், "பதவியேற்ற உடனே ராஜினாமா செய்த நான்கு அதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் பின்னணியை ஆராய வேண்டும்.

மிகப்பெரிய அளவில் பணப் பரிமாற்றம் நடைபெற்றிருப்பதாக தகவல் வருகிறது. இதுகுறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்" என அதிமுக எம்.பி தனபால் வலியுறுத்தியுள்ளார்.



# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் ஹஜ் பெருநாள் தொழுகை

சென்னை ஓட்டேரி தாதாஷா மக்கான் பகுதியில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் வடசென்னை மாவட்டம் தாதாஷா மக்கான் கிளை சார்பாக 27/05/26 அன்று தாதாஷா மக்கான் ஷேக் மொஹிதீன் சுபைதார் தெரு இக்ரா ஸ்கூல் அருகில் ஹஜ் பெருநாள் தொழுகை நடைபெற்றது. இதில் ஏராளமான ஆண்கள் பெண்கள் கலந்து கொண்டனர். இதில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் பேச்சாளர் நபில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் வடசென்னை மாவட்டம் சார்பாக நடைபெற்ற பக்ரீத் தொழுகை



சென்னை, மே, 29:

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் வடசென்னை மாவட்டம் சார்பாக நேற்று (28.05.2026) பிராட்வே பின்னி கார் பார்க்கிங் திடலில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை காலை சரியாக 07:15 மணிக்கு நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான ஆண்களும் , பெண்களும் , குழந்தைகளும் சிறப்புத்தொழுகையிலும் அதற்கு பிறகான பெருநாள் உரையிலும் கலந்து கொண்டார்கள். தொழுகையின் ஒரு அங்கமான குத்பா பேருரையை மாநில துணைப் பொதுச் செயலாளர் அப்துல் ரஹீம் நிகழ்த்தினார்.

இந்த உரையில் அவர் இப்ராஹிம் நபி ஏகத்துவம் எனும் கொள்கைக்காக செய்த தியாகங்களை நினைவு கூறி பேசினார், இஸ்லாமியர்கள் குர்பானி எனும் அடிப்படையில் பிராணிகளை பலியிட்டு ஏழைகளுக்கும் ஒரு பங்கை வழங்க இந்த மார்க்கம் வலியுறுத்துகிறது என்று பேசினார், மேலும் பாஜக ஒன்றிய அரசின் மூலமாகவும் பாஜக ஆளும் மாநிலங்களிலும் இஸ்லாமியர்கள் திட்டமிட்டு பல்வேறு வழிகளில் துன்பப்படுத்தப்படுகிறார்கள் இஸ்லாமியர்களுக்கெதிராக பேசும் முதல் அமைச்சர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள் எந்த விதமான கண்டனத்திற்கும் தண்டனைக்கும் உள்ளாவதாக தெரியவில்லை. இந்த இக்கட்டான சூழ்நிலையில் இஸ்லாமியர்கள், இஸ்லாம் காட்டித்தந்த பொறுமையை கடைபிடிப்பதோடு தங்களின் சமூகநிலையை மாற்றுவதற்கு தன்னலமில்லாத சேவையாற்ற வேண்டும் என பேசினார்.

குத்பா உரைக்கு பின்னர் நடந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் அப்துல் ரஹீம், தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றம் பின் தங்கியுள்ள இஸ்லாமிய சமூகத்தின் நீண்ட நாள் கோரிக்கையானஇட ஒதுக்கீட்டை உயர்த்தி தருவதோடு , பல்லாண்டுகளாக சிறையில் வாடும் இஸ்லாமிய சிறைவாசிகளை உரிய சட்ட நடைமுறைகளுக்குட்பட்டு விடுதலை செய்ய வேண்டும் எனும் கோரிக்கையும் வைத்தார். நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்த பெருநாள் தொழுகை மற்றும் குத்பா உரைக்குப் பிறகு மக்கள் அமைதியான முறையில் கலைந்து சென்றார்கள். தொழுகைக்குப்பிறகு திடல் அழகிய முறையில் தூய்மைபடுத்தப்பட்டதோடு கலைந்து செல்லும் மக்களால் போக்குவரத்து நெரிசல் ஏற்படாத வகையில் தொண்டரணியினர் சிறப்பான பங்களிப்பை செய்தார்கள்.



புதுச்சேரி, வில்லியனூர் கோகிலாம்பிகை உடனுறை திருக்காமீஸ்வரர் கோயில் திருத்தேர் திருவிழா நேற்று (28.05.2026) நடைபெற்றது. இதில் துணைநிலை ஆளுநர் கைலாஷ் நாதன், முதலமைச்சர் ரங்கசாமி, அமைச்சர் நமச்சிவாயம், சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார் ஆகியோர் கலந்துகொண்டு திருத்தேர் இழுத்து சாமி தரிசனம் செய்தனர். அதனைத் தொடர்ந்து அமைச்சர் நமச்சிவாயம் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் சட்டம் ஒழுங்கு மற்றும் சாலை பாதுகாப்பு குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் தலைமையில் (27.05.2026) அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.கவிதா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சோமசுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆர்.கே.கவிதா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# மல்லியம் கிராமத்தில் உள்ள ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தின் 40 ஆம் ஆண்டு சித்திரை திருவிழா:

## 200க்கும் மேற்பட்ட பக்தர்கள் பால்குடம், அலகு குத்தி நேர்த்திக்கடன்

மயிலாடுதுறை, மே 29:

மயிலாடுதுறை மாவட்டம் மல்லியம் கிராமத்தில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தின் 40ம் ஆண்டு சித்திரை திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.



கடந்த 22ம் தேதி ஸ்ரீ கணபதி ஹோமத்துடன் தொடங்கிய விழாவில், ஸ்ரீ ஐயனார் கரகம், மஞ்சள் காப்பு, பூச்சொரிதல், கஞ்சிவார்த்தல், சந்தனக்காப்பு உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவின் முக்கிய நிகழ்வான பால்குடம், காவடி திருவிழாவை முன்னிட்டு மல்லியம் காவிரி கரையில் இருந்து சக்தி கரகம் சிறப்பு பூஜைகளுடன் புறப்பட்டது. காப்பு கட்டி, மஞ்சள் உடை உடுத்திய 200க்கும் மேற்பட்ட பக்தர்கள் பால்குடம், பால் காவடி, பன்னீர் காவடி எடுத்தும், 16 அடி நீள அலகு வாயில் குத்தியும் மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக வந்தனர்.

பச்சை காளி, பவளக் காளி ஆட்டத்துடன் கோயிலை வந்தடைந்த பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தினர். வழிநெடுகிலும் பொதுமக்கள் தீபாராதனை எடுத்து வழிபட்டனர். பக்தர்கள் கொண்டு வந்த பாலால் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது. பெண்கள் மாவிளக்கு தீபமிட்டு வழிபட்டனர். இரவு அம்மன் சிறப்பு அலங்காரத்தில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் ஞாலம் ஊராட்சிக்குட்பட்ட முக்கூடல் சாந்தி ஆசிரமத்தில் முதியோர்களுக்கு உணவு வழங்கிய சமூக ஆர்வ ஆர்வலரும் தவெக நிர்வாகியுமான ஞாலம் ஜெகதீஷ் .

# கடந்த 13 ஆண்டுகளில் 1.5 லட்சம் நோயாளிகளுக்கு உயர் சிகிச்சை :

## தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை சர்வதேச தரத்துக்கு இணையாக செயல்படுகிறது ; மருத்துவ நிபுணர்கள் விளக்கம்

தஞ்சாவூா் , மே.29:

உலக அவசர நிலை மருத்துவ தினத்தை முன்னிட்டு தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர மருத்துவ பிரிவின் தலைவரும் முதுநிலை நிபுணருமான சரவணவேல், துணை மருத்துவ கண்காணிப்பாளர் பிரவீன் , அவசர மருத்துவ ஆலோசகர் ஆசிக் மீரான் ஆகியோர் கூட்டாக நிருபர்களுக்கு பேட்டியளித்தனர். அப்போது முதுநிலை நிபுணர் சரவணவேல் கூறியதாவது :



உரிய நேரத்தில் தகுந்த மருத்துவ ஆலோசனைகளை பெறுவதன் மூலம் இதயம் தொடர்பான அவசர சிக்கல்களை தவிர்க்க முடியும்.

இதய மயக்கவியல் நிபுணர்கள், இதய நாள சிகிச்சை நிபுணர்கள் , அவசர சிகிச்சை மருத்துவர்கள், நரம்பியல், அவசர சிகிச்சை நிபுணர்கள் மற்றும் விபத்து காய சிகிச்சை குழுவினர் ஆகியோர் இணைந்து செயல்படும் வலுவான கூட்டு மருத்துவ அணுகு முறையின் மூலமாகவே அவசர சிகிச்சைகளில் சிறந்த மற்றும் வெற்றிகரமான தீர்வுகளை பெற முடியும். தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை இந்த அனைத்து சிறப்பு மருத்துவ பிரிவுகளையும் ஒரே கூரையின் கீழ் ஒருங்கிணைத்துள்ளது. இதன் மூலம் சர்வதேச தரத்துக்கு இணையான அவசர சிகிச்சைகளை எங்கள் மருத்துவமனையால் வழங்கி நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற முடிகிறது . இவ்வாறு அவர் கூறினார்.

மேலும் நிபுணர்கள் கூறும்போது, டெல்டா பகுதியிலேயே அதிநவீன உள்கட்ட அமைப்பு மற்றும் மேம்பட்ட உயிர் காக்கும் வசதிகளுடன் பிரத்தியேக அவசர சிகிச்சை பிரிவை நிறுவிய முதல் மருத்துவமனை மீனாட்சி மருத்துவமனை ஆகும். கடந்த 13 ஆண்டுகளில் மீனாட்சி மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவு 1.5 லட்சத்துக்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு உயிருக்கு ஆபத்தான நிலைகளில் சிகிச்சை அளித்துள்ளது என்றனர்.

# ஹிமாலயா பேபிகேர், "கோல்டன் பேபி கிஃப்ட் பேக்" அறிமுகம் மற்றும் தங்கம் வெல்லும் வாய்ப்புடன் புதிய தொடக்கங்களை கொண்டாடுகிறது

சென்னை, மே 2026:

இந்தியாவின் மிகவும் நம்பகமான மற்றும் குழந்தைகளால் விரும்பப்படும் குழந்தை பராமரிப்பு பிராண்டுகளில் ஒன்றான ஹிமாலயா பேபிகேர், ஹிமாலயா பேபி கோல்டன் பேபி கிஃப்ட் பேக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. இது, மங்களகரமான புதிய தொடக்கங்களை கொண்டாடுவதோடு, குழந்தை பராமரிப்பு பரிசளிப்பை மேலும் அர்த்தமுள்ளதாகவும், எளிதில் அணுகக்கூடியதாகவும், ஈர்க்கக்கூடியதாகவும் மாற்றும் வகையில், கவனமாக தொகுக்கப்பட்ட அத்தியாவசிய பொருட்களின் தொகுப்பாகும். இந்தியாவில், பிறந்த குழந்தைகளுக்கு பரிசளிப்பது என்பது நமது உணர்வு மற்றும் பாரம்பரியத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது; அது தங்கத்தின் தூய்மை, ஆசீர்வாதங்கள் மற்றும் வளத்தை குறிக்கிறது. இந்த கலாச்சார புரிதலின் அடிப்படையில், ஹிமாலயா பேபிகேர் இந்த பாரம்பரியத்தின் நவீன வடிவமாக கோல்டன் பேபி கிஃப்ட் பேக்கை அறிமுகப்படுத்துகிறது. இது, அக்கறை மற்றும் மங்களம் ஆகிய இரண்டையும் பிரதிபலிக்கும் ஒரு தனித்துவமான தங்க நிறத்திலான பேக்கில், நம்பகமான குழந்தை பராமரிப்புக்கான அத்தியாவசிய பொருட்களை ஒன்றிணைக்கிறது.





தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் சதீஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் . பி. பள்ளிப்பட்டி ஊராட்சியில் வாசி கவுண்டனூர் முதல் கும்பராஅள்ளி வரை செல்லும் நீரோடையின் குறுக்கே ரூ.2.53 லட்சம் மதிப்பீட்டில் கேபியன் தடுப்பணை கட்டப்பட்டு வரும் பணி மற்றும் பையர்நத்தம் ஊராட்சி ஏரியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.1.48 லட்சம் மதிப்பீட்டில் மரக்கன்றுகள் நட்டு வளர்க்கப்பட்டு வரும் பணிகளை ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார். மேலும் வெங்கட சமுத்திரம் ஊராட்சி கோழி மங்களூரில் ரூ.8.40 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் நாற்றுப்பண்ணை கூடத்தில் 10 ஆயிரம் நாற்றுக்கள் வளர்க்க ப்பட்டு வருவதை ஆய்வு செய்தார் . பட்டு கோணம்பட்டியில் உள்ள ஏரி பூரண அமைக்கப்பட்டு வருவதை ஆய்வு செய்தார். இந்த வளர்ச்சி திட்ட பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது பாப்பிரெட்டிப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறிவழகன், ஆசாத், உதவி திட்ட அலுவலர் அருண்குமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜா, உமா, ரங்கநாதன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

## உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் சார்பில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி



திருவண்ணாமலை, மே. 29–

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னத்தூர் சட்டமன்றத் தொகுதி துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியம் தமிழக வெற்றி கழகம் சார்பில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், இணை செயலாளர் முருகன், பொருளாளர் விஜயகாந்த், துணை செயலாளர்கள் சிவா, ஸ்ரீதர் உள்ளிட்டோர் ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழக வெற்றி கழகம் தலைவர் விஜய் கடந்த சில வருடங்களுக்கு முன்பே த.வெ.க கட்சி தொடக்கப்பட்டு அன்று முதல் ஏழை, எளிய மக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கட்சியின் மூலமாக பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

அந்த வகையில் இன்று உலக பட்டினி தினத்தை முன்னிட்டு "பசி என்னும் பிணி போக்கிடும்" விழிப்புணர்வு ஏற்படுத்திட ஒரு நாள் மதிய உணவு சேவையகம் செய்ய வேண்டுமென த.வெ.க கட்சியின் தலைவர் விஜய் தமிழகத்தில் உள்ள அனைத்து ஏழை எளிய மக்களுக்கு பசியை போக்கும் விதமாக உணவு வழங்க வேண்டுமென கட்சியில் உள்ள நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டார்.

அதை தொடர்ந்து தமிழக முழுவதும் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு அனைவருக்கும் உணவு வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழக வெற்றி கழகம் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்று. வருகிறது.

அதன் ஒரு பகுதியாக திருவண்ணாமலைமேற்கு மாவட்ட செயலாளர் ஜி.கே. கதிரவன் உத்தரவின் பேயரில் கீழ்பென்னாத்தூர் தொகுதி துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றிய தமிழக வெற்றிக் கழகம் சார்பில் களஸ்தம்பாடி கூட்ரோடு அருகே அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியில் கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜா கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏழை, எளிய பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

நிகழ்ச்சியில் உறுதுணையாக இருந்த நிர்வாகிகள் கார்த்தி, பிரகாஷ், பிரபு, வெங்கடேசன், விஜயராஜ், ராமராஜன், புவனா, மஞ்சுநாதன், வேண்டா, சரத்குமார், ராகுல், நேரு உட்பட மாவட்ட, ஒன்றிய, உட்பட ஏராளமானோர்கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில்

## பழங்குடியினர் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் விழா



காஞ்சிபுரம், மே. 29–

காஞ்சிபுரம் மாவட்டம் மாநகராட்சி ஓரிக்கை பகுதியில் செயல்பட்டு வரும் குழந்தைகள் கண்காணிப்பகம் நிறுவனத்தின் சார்பில் பழங்குடியினர் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் கல்வி உதவித்தொகை வழங்கும் விழா காஞ்சிபுரத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு குழந்தைகள் கண்காணிப்பகத்தின் நிர்வாகி து. ராஜி தலைமை தாங்கினார் ,

ஒருங்கிணைப்பாளர் ஏழுமலை வரவேற்று பேசினார் இதில் சிறப்பு விருந்தினராக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் யசோதரன் மற்றும்சமூகநலத்துறைவழக்குப் பணியாளர் விபு கலந்து கொண்டு 40 குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை தலா 5000 ரூபாய்க்காண காசோலைகள் மற்றும் நோட்டு புத்தகங்கள் ,புத்தக பை, எழுத பொருட்கள் போன்றவைகளை வழங்கி கல்வியின் அவசியம் குறித்தும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்தும் பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகள் அணுக வேண்டிய அலுவலகங்கள் மற்றும் தொலைபேசி எண்கள் குறித்தும் விபரமாக பேசினார்.

மேலும் இந்த கல்வி யாண்டில் குழந்தைகள் கண்காணிப்பகத்தின் தொடர் உதவியில் கல்வி பயின்று தற்போது பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்ற பழங்குடி குழந்தைகள் நான்கு பேருக்கும் , பனிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மூன்று பேருக்கும் பொன்னாடை போர்த்தி சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

இதில் பல்வேறு கிராமங்களில் இருந்து பழங்குடியினர் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து கல்வி கற்கவும் இடைநிற்றல் இல்லா பள்ளிக்கு செல்லவும் வலியுறுத்தி உறுதிமொழி எடுக்கப்பட்டது.




செங்கல்பட்டு மாவட்டம்,தாம்பரம் மாநகராட்சி பீர்க்கன்கரணையில் உள்ள பீர்க்கங்கரனை ஏரியில் செங்கல்பட்டு மாவட்டம் நிர்வாகம், தாம்பரம் மாநகராட்சி, எக்ஸ்னோரா பவுண்டேஷன் இணைந்து komatsu நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்டது. ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்ட ஏரியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் சரத்குமார் தலைமையில் (27.05.2026) அன்று நடைபெற்றது.இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.மாலதி ஹெலன், எக்ஸ்னோரா தலைவர் செந்தூர் பாரி, komatsu நிறுவன இயக்குனர் சுந்தர்,மாநகராட்சி துணை ஆணையர் பிரேம்நாத், மாநகராட்சி உதவி ஆணையர் ராஜலட்சுமி, வட்டாட்சியர்நடராஜன்மற்றும்நீர்வளத்துறை அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.









திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னத்தூர் சட்டமன்றத் தொகுதி மங்கலம் துரிஞ்சாபுரம் தெற்கு ஒன்றியம் தமிழக வெற்றி கழகம் சார்பில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தெற்க ஒன்றிய செயலாளர் சுரேஷ் தலைமையில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாவட்ட, ஒன்றிய, கிளை, கழக பொறுப்பாளர்கள் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




உலக பட்டினி தினத்தை முன்னிட்டு நேற்று திருவள்ளூர் பூவிருந்தமல்லி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட காக்களூர் ஊராட்சியில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி பிரமாண்டமாய் நடைபெற்றது .,பூந்தமல்லி தெற்கு மாவட்ட செயலாளர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் பிரகாசம் என்கிற குட்டி, மற்றும் திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் காக்கை E. ஆனந்தன், தமிழக வெற்றி கழகத்தில் புதிதாக இணைந்துள்ள முன்னாள் காக்களூர் ஊராட்சி மன்ற தலைவியின் கணவர் ராஜ்குமார் தலைமையில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு பத்து வகையான காலை உணவுகளை வழங்கினார் 300க்கும் மேற்பட்டோர் இந்த காலை உணவை உண்டு தமிழக முதலமைச்சர் விஜயையும் திருவள்ளூரில் பூந்தமல்லியில் சிறப்பாக பணிபுரியக்கூடிய தவெக சட்டமன்ற உறுப்பினர்களையும் கட்சி தொண்டர்களையும் வெகுவாக பாராட்டி செல்கின்றனர். இந்நிகழ்ச்சியில் பிரகாஷ், கலைச்செல்வன், பாக்யராஜ், ராகவன், ராஜாபாதர், தமிழரசன், ராகுல், விஜயராஜ், விஜய்,ராஜன், சுரேஷ், மணிகண்டன், செந்தில் ராஜன், திவ்விய, கீதா, எழைலராசன், மற்றும் காக்களூர் பொதுமக்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்,

## அங்கன்வாடி மையங்களில் குழந்தைகள் சேர்க்கை




சிவகங்கை, மே.29–

சிவகங்கை மாவட்டம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மூலம் செயல்பட்டு வரும் 1552 குழந்தைகள் மையங்களில் 2 வயது முதல் 6 வயது வரையிலான குழந்தைகளை தங்களது அருகில் உள்ள அங்கன்வாடி மையங்களில் அனைத்து பெற்றொர்களும் சேர்த்து பயன்களை பெறலாம்.

அங்கன்வாடி மையங்கள் வாயிலாக கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு பல்வேறு பயன்கள் அளிக்கப்பட்டு வருகிறது. அதில், கருவுற்ற தாய்மார்கள் கர்ப்பம் உறுதி செய்யப்பட்டவுடன் தங்களது இருப்பிடத்திற்கு அருகில் உள்ள அங்கன்வாடி மையங்களை அணுகி அங்கு வழங்கப்படும் சத்துமாவினை அந்தந்த மாத அளவுப்படி அங்கன்வாடி பணியாளர் கூறும் அளவில் தினசரி எடுத்துக்கொள்ள வேண்டும். அதில் பயன்பெறுவதற்கு தங்களது ஆதார் மற்றும் மொபைல் எண் அங்கன்வாடி பணியாளரிடம் வழங்கி அதனை போஷான் டிராக்கர் செயலியில் பதிவிட்டு முக பதிவு அங்கீகாரம் (Facial Recognition System) வாயிலாக மாதந்தோறும் சத்து மாவு பாக்கெட்டுகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேலும், குழந்தை பிறந்தது முதல் ஆறு மாதம் வரை பாலூட்டும் தாய்மார்கள், குழந்தை பிறந்து 6 மாதம் முடிந்து 7வது மாதம் முதல் 24வது மாதம் வரையிலான குழந்தைகள் ஆகிய இருவரும் தினசரி சாப்பிடுவதற்கான சத்து மாவு பாக்கெட்டுகள் தங்களது இருப்பிடத்திற்கு அருகில் உள்ள அங்கன்வாடி மையங்களிலும் அங்கன்வாடி பணியாளரால் அந்தந்த மாத அளவுப்படி வழங்கப்பட்டு வருகிறது. அதில் பயன்பெறுவதற்கு தங்களது ஆதார் மற்றும் மொபைல் எண் அங்கன்வாடி பணியாளரிடம் வழங்கி அதனை போஷான் டிராக்கர் செயலியில் பதிவிட்டு முக பதிவு அங்கீகாரம் (Facial Recognition System) வாயிலாக மாதந்தோறும் சத்து மாவு பாக்கெட்டுகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக, இரண்டு வயது முடிவுற்ற குழந்தைகள் அவர்களது கற்றல் திறனை மேம்படுத்தவும், சிறப்பான கல்வித்திறன் பெறவும் ஏதுவாக தங்களது இருப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளை சேர்த்து அவர்களுக்கான முன்பருவக்கல்வி பெற வேண்டும். இங்கு இந்த முன்பருவக்கல்வி குழந்தைகளுக்கு தினசரி காலை 9 மணி அளவில் சத்துமாவு உருண்டை அல்லது கொழுக்கட்டையாக வழங்கப்படுகிறது , மாலை 03.00 மணி அளவில் சத்துமாவு உருண்டை அல்லது கொழுக்கட்டையாக வழங்கப்படுகிறது. மேலும், தினசரி மதிய உணவு ஒவ்வொரு நாள் உணவு அட்டவணைப்படி வழங்கப்படுகிறது, வாரத்தில் 3 நாட்கள் முட்டையும் ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்படுகிறது. அனைத்து குழந்தைகளும் தினசரி காலை 08.30 மணி முதல் மாலை 04.00 மணி வரை கட்டாயம் அங்கன்வாடி மையத்தில் இருந்து முன்பருவக்கல்வி பயில வேண்டும்.

மேலும், மாதந்தோறும், குழந்தை பிறந்தது முதல் 6 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் அங்கன்வாடி பணியாளரால் எடை, உயரம் (தொட்டில் அமைப்பிலான எடை எடுக்கும் கருவிSalter Scale) அளவிட்டு போஷான் டிராக்கர் செயலியில் பதிவிடப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை கண்காணிக்கப்பட்டு எடை உயரம் குறைபாடுகள் கண்டறியப்படும் பட்சத்தில் அந்த குழந்தைகளுக்கு வீட்டிற்கு எடுத்துச்சென்று சாப்பிடும் வகையில் மையத்தில் இருந்து பிஸ்கட்டுகள் வழங்கப்பட்டு வருகிறது . அதனைத்தொடர்ந்து குழந்தைகளின் எடை, உயரம் அளவீடுகள் செய்யப்படும் போது, ஏதேனும் குழந்தைகள் இயல்பு நிலைக்கு கொண்டுவர இயலாத நிலையில் தொடருமேயானால் அந்த குழந்தைகளுக்கு RBSK எனும் மருத்துவ குழுவினரால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சிகிச்சைகளுக்காகவும் அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டு, தொடர்ந்து அங்கன்வாடி பணியாளர், மேற்பார்வையாளர், வட்டார ஒருங்கிணைப்பாளர் மற்றும் குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டும் வருகிறார்கள்.

அங்கன்வாடி மையத்திலும், குழந்தைகளுக்கான சிறப்பு விளையாட்டு உபகரணங்கள் , முன்பருவக்கல்வி புத்தகங்கள், முன்பருவக்கல்வி கற்கும் உபகரணங்கள் மற்றும் அங்கன்வாடி மைய முன்பருவக் கல்வி குழந்தைகளுக்கு சீருடைகள் ஆகியவைகுழந்தைகளின் கற்கும் திறனை மேம்படுத்தும் வகையில் அங்கன்வாடி மைய சேவைகளானதுதற்போதுவிரிவாக்கம் செய்யப்பட்டு தொடர்ந்து அனைத்து மையங்களிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை பெற்றோர்கள் கருத்தில் கொண்டு அனைத்து குழந்தைகளையும் 01.06.2026 முதல் அங்கன்வாடி மையங்களில் சேர்த்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில்

## லாரி மீது ஆம்னி பேருந்து மோதி விபத்து- 8 பெண்கள் உள்பட 20 பேர் காயம்

தூத்துக்குடி, மே. 29–

கோவில்பட்டி அருகே தேசிய நெடுஞ்சாலையில் பிரேக் பழுது காரணமாக சிமெண்ட் கலவை டேங்கர் லாரி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

கோவையிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு நாகர்கோவில் நோக்கிச் சென்ற தனியார் ஆம்னி பேருந்து இன்று அதிகாலை கோவில்பட்டி மூப்பன்பட்டி விலக்கு பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தது.

அதே நேரத்தில், நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்த இசக்கி ஓட்டி வந்த சிமெண்ட் கலவை டேங்கர் லாரியின் பிரேக் பகுதியில் திடீரென பழுது ஏற்பட்டதால், லாரியை சாலையோரமாக நிறுத்திவிட்டு பழுதை சரி செய்ய முயன்றார். லாரி நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் எச்சரிக்கை குறியீடுகள் எதுவும் வைக்கப்படாத நிலையில், பின்னால் வந்த ஆம்னி பேருந்து எதிர்பாரா தவிதமாக டேங்கர் லாரியின் பின்புறத்தில் பலமாக மோதியது.

விபத்தின் தாக்கத்தால் பேருந்தின் முன்பகுதி முழுவதுமாக சேதமடைந்தது. பேருந்து ஓட்டுநரான உடுமலைப்பேட்டையைச்சேர்ந்த சரவணன் வாகன இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டார். மேலும், பேருந்தில் பயணம் செய்த 8 பெண்கள் மற்றும் ஒரு குழந்தை உட்பட 20 பேர் காயமடைந்தனர்.

தகவலறிந்துசம்பவ இடத்துக்கு விரைந்த கோவில்பட்டி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்துறையினர், நவீன கருவிகள் மூலம் பேருந்தை வெட்டி ஓட்டுநர் சரவணனை மீட்டனர். காயமடைந்த அனைவரும் 108 ஆம்புலன்ஸ் மூலம் கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த விபத்தால் திருநெல்வேலி – மதுரை தேசிய நெடுஞ்சாலையில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவலறிந்து வந்த கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீசார் விபத்துக்குள்ளான வாகனங்களை அகற்றி போக்குவரத்தை சீரமைத்தனர்.

மேலும், விபத்து தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், டேங்கர் லாரி ஓட்டுநர் இசக்கியிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor:S.V.KANI RAJA. CALL: 044-22772060,9443699066